**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 06 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருதுரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றக்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்காமை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் மூலதனச் சொத்துக்களை கைப்பற்றியமை நிதிச் செயலாற்றல் அறிக்கையில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,611,189 ஆகவும் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ரூபா 3.684,435 ஆகவும் காட்டப்பட்டிருந்தது. | நிதியல்லாச் சொத்துக்களுக்கான அதன் ஆரம்ப மிகுதிக்கான சீராக்கங்கலுக்கான நாளேட்டுப் பதிவொன்று நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஏசீஏ – 06 படிவத்தில் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவாக பிழையாக குறிக்கப்பட்டமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டது. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.1 ஆம் பந்திக்கான வழிகாட்டி இலக்கம் 06 இல் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வெண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 13 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக ரூபா 27,619,000 ஆன மதிப்பீட்டு ஒதுக்கங்களில் ரூபா 8,330,635 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒவ்வொரு செலவு விடயங்களின் சேமிப்பானது நூற்றுக்கு 16 தொடக்கம் நூற்றுக்கு 100 வரையிலான வீச்சில் காணப்பட்டது. | பின்வரும் காரணங்களினால் மீண்டெழும் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன.<br><br>(i) கொவிட் - 19 தொற்று நோய் நிலையங்களினால் 4 மாதங்களுக்கு கிட்டிய காலம் வரையறுக்கப்பட்ட அளவிலான உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டமை, வெளிக்களப் பணிகளைச் செய்வதிலிருந்து உத்தியோகத்தர்களைக் கட்டுப்படுத்தியமை, வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளப்படாமை, முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் ஏனைய செயற்திட்டங்களில் பங்குபற்றாமை, கடமைகளுக்கான வாகன பாவனைகள் குறைக்கப்பட்டமை.<br><br>(ii) இரண்டு சாரதிகளுக்கு சீருடைக்கான பணம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாவிட்டாலும் அது வேறு செலவு விடயங்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் அச் செலவு விடயத்திற்கு ஏற்பாடுகளின் மாற்றங்கள் புறக்கணிக்கப்பட்டமை. | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கும் பொது நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் அளவு செயலாற்றுகை அறிக்கை அச்சிடுவதற்கு போதுமானதாக இல்லாமையால் ஏனைய செலவு விடயங்களிலிருந்து அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை , 4 மாதங்கள் காலமாக அலுவலகத் திருத்த வேலைகள் நடவடிக்கை திட்டமிட்டதன் படி மேற்கொள்ளப்படுவதற்கு முடியாது போனமை, தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தமை மற்றும் தபால் நடவடிக்கைகள் கிரமமான முறையில் இயங்காமை, 04 மாதங்களாக தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் மூடப்பட்டமை, 08 மாதங்காளக துப்பரவு தொழிலாளர்கள் வேலைக்கு வராமை.<br><br>(iv) உத்தியோகத்தர்களின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான கோரிக்கைகள் குறைவடைந்தமை.<br><br>(v) வாகனச் செலவு விடயங்களில் செலவுகள் குறைக்கப்பட்டமை. | |
| (ஆ) | 04 மூலதன விடயங்களுக்கு ரூபா 7,232,000 ஆன மதிப்பீட்டு ஒதுக்கங்களில் ரூபா 3,606,792 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒவ்வொரு செலவு விடயங்களிலும் சேமிப்பானது நூற்றுக்கு 42 வீதம் தொடக்கம் நூற்றுக்கு 80 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பின்வரும் காரணங்களினால் மூலதன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன.<br><br>(i) பிரதேச செயலகங்கள் 02 இனைத் திருத்துவதற்காக சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றங்களுக்கு ஏற்பாடுகள் | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படும் போது நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்று நோய் நிலைமையினால் அந்த மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.<br><br>(ii) கணனி இயந்திரங்களுக்கான வைரஸ் தடுப்பு மென் பொருளைப் பெறுவதற்காக செலவிடப்பட்டமையுடன் வேறு மேம்படுத்தல் இல்லாமை.<br><br>(iii) வாகனங்கள் நல்ல நிலைமையில் காணப்பட்டமை.<br><br>(iv) உத்தியோகர்த்தர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் நல்ல குடிமக்களாக சமூகமயமாக்கப்பட்ட துணை அதிகாரிகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டமை. | |

**2.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

**பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்படாமையால் 9 வருடங்களுக்கும் அதிகமான காலம் பேணப்பட்டு வருகின்ற வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் அறவிட வேண்டிய ரூபா | வேலை நீக்கம் செய்யப்பட்ட ஜே.ஜீ.பீ.பீ வீரசிங்க என்பவருக்காக நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணை தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருவதுடன் அவரின் அறவிட வேண்டிய ரூபா 131,020 ஆன கடன் | அறவிடப்பட வேண்டிய கடனை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 131,020 ஆன கடன் மிகுதி அறவிடப்படாமல் காணப்பட்டது. | மிகுதியை அறவிடுவதற்காக டீசீபீசீ/ஏசீசீ/07/04 மற்றும் 2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய கடிதம் குறித்த பிணையாளியான டீ.விரித்தமுல்ல என்பவருக்கு அனுப்பபட்டுள்ளதுடன் அவரது சேவை நிலையமான அலபத்த பிரதேச செயலகத்தின் பிரதேச செயலளாருக்குக் கடிதம் அனுப்பப்ட்டுள்ளது. மீண்டும் நினைவூட்டல் கடிதங்கள் 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 118 இன் பிரகாரம் அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு மற்றும் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 300,551 ஆனது அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்திற்குள் அரச அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கு மாற்றமாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 186,676 ஆன தொகை அறவிடப்படுவதற்காக சம்பள விபரங்கள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அனுப்பபப்பட்டுள்ளன. மேலும் 2020 ஆம் வருடத்திற்குள் மாகாண அரச சேவையின் ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்டுச் சென்ற எம்.கே.எம் றஸ்மி அவர்களின் அறவிட வேண்டியிருந்த ரூபா 113,875 ஆன தொகையை விரைவில் தீர்ப்பதற்குக் கோரப்பட்டு அகுரஸ்ஸ வலய கல்விக் காரியாலயத்திற்கு கடிதம் அனுப்பபட்டுள்ளது. | வரவு, செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 118 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உடன்படல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 10.1 ஆம் பந்தியின் வழிகாட்டி இலக்கம் 06 இன் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிப் பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் கீழ் இல்லாத கடப்பாடுகளாக ரூபா ரூபா 202,164 ஆன உள்நாட்டுப் பயணச் செலவுகள் கடப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 02/2020 இன் 10.1 ஆம் பந்திக்கான வழிகாட்டி இலக்கம் 06 இன் 06 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | |
| --- | --- | --- | --- |
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(2) | வேலை முடிந்தவுடன் பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 43 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 759,470 ஆன முற்பணம் 13 நாட்கள் தொடக்கம் 227 நாட்களான காலப்பகுதி தாமதமாகி தீர்க்கப்பட்டிருந்தன. | 2020 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 வரையில் சமுதாய அடிப்படை சீர்திருத்தத் திணைக்களத்தின் பல்வேறு பணிகளுக்காக 165 சந்தர்ப்பங்களில் ரூபா 1,530,620 ஆன தொகை இடைக்காலக் கட்டு நிதிக்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும் பெறப்பட்ட முற்பணங்களில் வேலை முடிந்தவுடன் தீர்க்கப்படாத 43 சந்தர்ப்பங்களுக்கான ரூபா 759,470 ஆன | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | இடைக்காலக் கட்டு நிதி தொடர்பான விடயம் குறித்துக்கொள்ளப்பட்டது. |

## 2.5 வங்கிக் கணக்குச் செயற்பாடுகள்

வங்கிக் கணக்குச் செயற்பாடுகள் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 100159027420 ஆன வங்கிக் கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 37,035 பெறுமதியான 29 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏனைய வருடங்களில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைக்காக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வங்கி இணக்கம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஒக்டோபர் மாதம் மீண்டும் கொவிட் 19 இரண்டாவது அலை தொடங்கியதுடன் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் பின்பற்றபட வேண்டிய நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை. நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் வங்கி இணக்கம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத ரூபா 30,048 பெறுமதியான 16 காசோலைகள் இனங்காணப்பட்டு சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2020 ஒக்டோபர் மாதம் மீண்டும் கொவிட் 19 இரண்டாவது அலை தொடங்கியமை, அவ்வப்போது பகுதிகளைத் தனிமைப்படுத்தியமை மற்றும் பிரதேச செயலகங்கள் மூடப்பட்டிருந்த காரணத்தினால் | இணங்காணப்படாத மிகுதிகள் விரைவில் இனங்காணப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திணைக்களக் கணக்கிற்கு பணம் செலவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் பிரதிகள் தலைமைக் காரியாலயத்திற்கு பெறப்படாமையால் வேறு வேறாக மிகுதிகளை இனங் காண்பதில் சிக்கல்கள் காணப்பட்டது. | |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் முன்னேற்றம் கிடைக்கப் பெறாத செயற்திட்டங்கள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பெல்மதுள்ள மற்றும் களுத்துறைச் சமூகச் சீர்திருத்த அலுவலகங்களின் மேம்பாட்டிற்காக முறையே ரூபா 922,896 மற்றும் ரூபா 679,810 ஆன ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இரத்தினபுரி உயர் நீதிமன்றத்தினால் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பெறுகை நடவடிக்கைகள் முடிந்துள்ளதுடன் குறைந்த மனுதாரரினால் 2020 திசெம்பர் 31 இல் வேலையை முடிப்பதற்கு இயலாமை தெரிவிக்கப்பட்டதுடன் இரண்டாவது மனுதாரரின் மனு பூரணமற்றதாகச் சமர்ப்பிக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் இரத்தினபுரி உயர் நீதிமன்றத்தின் இலக்கம் ரத்/மஹாடி./கனக/பெறுகை/ 2020 மற்றும் 2020 திசெம்பர் 14 ஆந் திகதிய கடிதத்தினால் ஒதுக்கங்கள் மீண்டும் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டது. களுத்துறை உயர் நீதிமன்றத்தினால் நிர்மாண நடவடிக்கைகளுக்கான பெறுகை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன் கொவிட் 19 காரணத்தினால் திருத்த நடவடிக்கைகளுக்காக வெளியாட்கள் நுழைவதற்குப் பாணந்துறை மஜிஸ்திரேட் நீதிமன்றம் தடுந்தமையால் குறிப்பிட்ட திருத்த வேலைகள் நடைபெறாமையினால் | ஒதுக்கங்கள் வழங்கப்பட்ட செயற்திட்டங்கள் திட்டமிட்டபடி செயற்படுத்தப்பட வேண்டும். |

|  |  |  |
|---|---|---|
|  | களுத்துறை நீதிமன்றத்தின் இலக்கம் களு/மாஹாடி/கி/ப்ரதி.இல்லீம்/2020 மற்றும் 2020 திசெம்பர் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஒதுக்கங்கள் மீண்டும் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. |  |

**3.2 பெறுகைகள்**

-----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் 3 வருடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகைகள் உள்ளடகியதாக பெறுகைத் திட்டமொன்று மற்றும் ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதான விரிவான பெறுகைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் வருடத்திற்காக மட்டும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | இத் திணைக்களத்தினால் மிகப் பெரிய அளவிலான நீண்ட காலத்திற்கு செய்யப்பட வேண்டிய பெறுகை நடவடிக்கைகள் இல்லாமையால் குறித்த வருடத்தில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களின் அளவுகளின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு இதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தயவுடன் தெரிவிக்கின்றேன். மேலும். ஒவ்வொரு பெறுகை செயன் முறைகளின் படிகளையும் விபரிக்கின்ற விரிவான பெறுகைத் திட்மொன்று இற்றை வரையில் தயரிக்கப்படாமையால் எதிர்வரும் வருடங்களிலிருந்து விபரமான பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 இன் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் ரூபா | இத் திணைக்களத்தினால் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| 3,307,159 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது பெறுகைக்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. | மற்றும் சேவைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் மறறும் மனுதாரருடன் ஒப்புதல் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படுவதில்லை. இற்றை வரையில் வழங்குநர் அல்லது மனுதாரர் ஒப்புதல் கடிதத்தை கருததிற் கொண்டு பொருட்கள் மற்றும் சேவைகளை திணைக்களத்திற்கு வழங்கும்போது திணைக்களத்தின் விதிமுறைகளை உள்ளடக்கியதான முறையான ஒப்பந்தமாக கொள்வனவு கட்டளை (**Purchase Order**) மூலம் வழங்குநர் அல்லது மனுதாரருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அரச நிதித் திணைக்களத்தினால் விலை மனுக்கோரல் முறையில் பிரகாரம் விலை மனுக் கோரும் போது பரிந்துரைக்கப்பட்ட நிலையான மனு ஆவணம் **(Standard Bidding Docment National Shopping Procedures)** பிரகாரம் ஒப்பந்தத்திற்கான மாதிரிப் படிவம் அறிமுகப்படுத்தப்படவில்லை. எனினும். எதிர்காலத்தில் திணைக்களத்தினால் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படுவதநற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் தெரிவிக்கின்றேன். | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பயனுள்ள சேவை நிலையொன்றைப் பேணுவதற்கு மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட நிலையில் 03 பதவிகள், மூன்றாம் நிலையில் 27 பதவிகள், இரண்டாம் நிலையில் 69 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 03 பதவிகளும் உள்ளடங்கலாக மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 102 ஆகும். | 2021 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட 201 அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட நியமிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 744 ஆகும். 354 அபிவிருத்தி உதவியாளர் பதவிகளை ஏற்படுத்தவதற்கு 2020 ஒக்டோபர் 06 ஆந் திகதி நிதிப்பிரமாணம் 71 இன் படி விண்ணப்பபம் படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெற்றிடங்கள் காணப்பட்ட 15 சமுதாய சீர்திருத்த அதிகாரிகள் பதவியில் 10 அதிகாரிகள் மற்றும் 21 பரிசோதனையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டமை இற்றை வரையில் மேற்கொள்ளப்பட்டது. சிரேஷ்ட சமுதாய சீர்திருத்த அதிகாரி பதவியில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 52 அபிவிருத்தி அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதுடன் 2021 ஏப்ரல் 01 இலிருந்து புதிய அலுவலர்கள் 201 பேர் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். கணக்காளர், மொழி பெயர்ப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவைகள் உதவியாளர், அலுவலகப் பணியாட்கள், சாரதிகள் பதவிகளுக்காக அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்காக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொருத்தமான அலுவலர்கள் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டு பயனுள்ள சேவை நிலை ஒன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |